இத்துறையின் பாடங்களும் தரப்புள்ளியும் பின்வருமாறு அமையும்.

பருவம் Semester	பாடக் குறியீட்டு எண் Subject Code	பாடத் தலைப்பு SubjectTitle	கற்பித்தல் அளவண் Credit	கற்பித்தல் நேரம் Teaching Hour	மதிப்பெண் Mark			
					அகமதிப்பெண் Internal Mark	புறமதிப்பெண் External Mark		மொத்த மதிப்பெண் Total Mark
						குறைந்த அளவு Minimum	அதிக அளவு Maximum	
பருவம் 1 Semester 1		1. செயல்முறை – 1 (practical-1)	4	25	75	34	75	100
		2. செயல்முறை – 2 (practical-2)	4	25	75	34	75	100
		3. இசையியல் - 1 (Musicology-1)	4	25	75	34	75	100
			12					300

தாள் - 1 செயல்முறை practical -1

Objectives:

- To learn the Basi**c** Traning of Music
- To Observe the Vocal Chord Practice

நோக்கம்:-

- இசையின் அடிப்படை பயிற்சி நிலைகளைக்கற்றல்
- குரலிசைப்பயிற்சிகளைப் பெறுதல்

அலகு - 1 : கீழ்க்கண்ட வரிசைகளுக்கு இரண்டு காலப்பயிற்சி

(அ) சுருதி சுவர வரிசைகள்
சமன், வலிவு, மெலிவு, மண்டில வரிசைகள்

Unit – 1 : Two Speeds of Following Lessons
(Saman, Valivu, Melivu, Mandila Varisai)

அலகு - 2 : ஏழு தாள அடுக்கணி (சப்த தாள அலங்காரங்கள்) இரண்டு காலங்களில் பாடுதல்

Unit – 2 : Sapta Tala Alankara (singing two Speeds)

அலகு - 3 : கீதம் - பிள்ளையார் கீதம் 1, தமிழ் கீதம் 1

Unit – 3 : Geetham – Pillaiyar Geetham 1, Tamil Geetham 1

அலகு - 4 : தேவாரம் 3

Unit – 1 : Tevaram 3

அலகு - 5 : திருப்புகழ் 3

Unit – 1 : Thiruppugazh 3

References:

1. Abhraham Panditar, Karnamirtha Sagara Thirattu

2.Ganamritha Bhoothini

3 Moovarthirumurai Padagal

4. Thiruppugal

தாள்-2: செயல்முறை-2 (Practical-2)

Objectives:

- To get higher level Music
- To practice the Musical forms

நோக்கம்:

- இசையின் உயர் நிலைப் பயிற்சி பெறுதல்
- இசை வகைகளைப் பாடும் பயிற்சி பெறுதல்

அலகு - 1 : ஆதி தாள வர்ணம் 1

Unit – 1 : Athi Tala Varnam 1

அலகு - 2 : கீர்த்தனைகள் 5 (ஹம்சத்வனி, மாயாமாளவகௌளை, மோகனம், சங்கராபரணம், பந்துவராளி)

Unit – 2 : Keerthana 5 (Hamsadvani, Mayamalava Gowla, Mohanam, Sankarabharanam, Pantuvarali

அலகு - 3 : திருப்பாவை 1, திருவாசகம் 1

Unit – 3 : Thiruppavai 1, Thiruvasagam 1

அலகு - 4 : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் 2

Unit – 4 : Nalayira Divya Prabhandam 2

அலகு - 5 : நாட்டுப்புறஇசை மெட்டுக்கள் 2

Unit – 5 : Folk Music tunes 2

References:

1. Panchabhikesaiyar, Varnamalaiga
2. Annamalai University Publication ,Varnam and Keerthana
3. B.M . Sundaram, Tanavarna Tharangini Vol 1-4

தாள்-3: இசையியல் (Musicology)

Objectives:

- To Know the technical terms of Music
- To Learn the Musical Instruments and Musical Compostions

நோக்கம்:

- இசையின் தமிழிசைக்கலைச்சொற்களை அறிதல்
- இசைக்கருவிகள், இசை உருப்படிகளின் இலக்கணங்களைக்கற்றுக் கொள்ளுதல்

அலகு - 1	:	இசைக்கலைச்சொற்கள்: மண்டிலம், இயக்கு, ஏழு தாளம் முதலிய 10 கலைச்சொற்கள்.
Unit – 1	:	Musical Technical Terms (Mandilam, Iyakku, Seven types of Talas etc -10 Technical Terms
அலகு - 2	:	இசை உருப்படிகள்: திருப்பாவை, திருவாசகம், ஆனந்தக்களிப்பு, கும்மி, குறத்திமெட்டு முதலானவை
Unit – 2	:	Musical Forms Thiruppavai, Thiruvasagam, Anantha Kalippu, Kummi, Karathi Mettu etc
அலகு - 3	:	இசைக்கருவிகள் நரம்புக்கருவி, காற்றுக்கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி
Unit – 3	:	Musical Instruments (Stringed Instruments, Wind instruments, Percussion Instruments, Avanatha Instruments)
அலகு - 4	:	தாளம் - ஆதி, ரூபகம், சாப்பு, ஜம்பை தாள வகைகள்
Unit – 4	:	Talam –Adhi, Rupakam,Chapu, Jampa Tala Vaaraities
அலகு - 5	:	இயலிசைப் புலவர்களின் வாழ்க்கை வரலாறு அருணகிரிநாதர், முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாச்சலக்கவிராயர்
Unit – 5	:	Life History of Musical Composers (Arunagiri natha, Muthu thandava, Marimuthapillai, Arunachala Kavirayar)

References:

1. Musicology , Certificate Books, Distance Education Tamil University

2. Musicology , Diploma Books, Distance Education Tamil University

3. Musicology , B.A (Music) Books, Distance Education Tamil University

Credit Requirements for Certificate

The minimum required credits for **Certificate** are 12

Teaching Methods

Teaching is done through class room lectures, demonstration, Hearing CD's and Programmes Seminar and Workshop participation and Library Reading.

Methods of Assessment

Written Exam for 75 Marks and 25 marks for internal assessment, for the theory papers. Exams of 3 hours would be conducted for the external exams.

Internal marks

Internal marks would be assessed on the basis of written test, class room Practice and assignment, and attendance. The weightage for the internal assessment (out of 40 marks) would be as listed below.

Written test	10
Class Room Practice	5
Assignment	5
Attendance	5

For 90 percent and above attendance 5 marks
For 80 to 89.9 percentage attendance 4 Marks
For 80 to 79.9 percentage attendance 3 Marks
For 75 and above 2 marks

பாடத்திட்டம்

(CBSC)

ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010.

திசம்பர் 2017

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 010
ஓலைச்சுவடித்துறை
பாடத்திட்டக் குழு அறிக்கை

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் 16.12.2017அன்று காலை 10.30மணி அளவில் முனைவர் மோ.கோ. கோவைமணி அவர்கள் தலைமையில் ஓலைச்சுவடித்துறையில் பாடத்திட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்குழுக் கூட்டத்தில் முதுகலை தமிழ் மற்றும் சுவடியியல், முதுகலை - விருப்பப் பாடங்கள், சுவடியியல் - பட்டயம், ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம் போன்றவற்றிக்குப் பாடங்கள் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டன. **ஓலைச்சுவடித்துறையில் பாடத்திட்டக் குழு உறுப்பினர்கள் பின்வருமாறு:**

தலைவர்

1. முனைவர் மோ.கோ. கோவைமணி
   இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
   ஓலைச்சுவடித்துறை
   தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.

அலுவல்வழி உறுப்பினர்

2. முனைவர் த.கலாஸ்ரீதர்
   உதவிப் பேராசிரியர்
   ஓலைச்சுவடித்துறை
   தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.

நியமன உறுப்பினர்கள்

3. முனைவர் கா. சத்தியபாமா
   இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் (ஓய்வு)
   தமிழ்த்துறை, சிவகங்கை அரசு மகளிர் கல்லூரி
   சிவகங்கை.

4. புலவர் மணி.மாறன்
   தமிழ்ப் பண்டிதர்
   சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர்-9.

5. முனைவர் கோ. உத்திராடம்
   காப்பாட்சியர் (பொ.)
   உ.வே.சா. நூலகம்
   2, அருண்டேல் கடற்கரை சாலை
   பெசண்ட் நகர், சென்னை.

6. முனைவர் அ. சதீஷ்
   இணைப்பேராசிரியர்,
   தமிழ்த்துறை, சுவடிப்புலம்
   உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
   தரமணி, சென்னை - 600 113.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 010

ஓலைச்சுவடித்துறை

மாணவர்களுக்கான

முதுகலை தமிழ் மற்றும் சுவடியியல்

பட்டப் படிப்பிற்கான பாடத்திட்டம்

இத்துறையின் பாடங்களும் தரப்புள்ளியும் பின்வருமாறு அமையும்

பருவம் Semester	பாடக்குறியீட்டு எண் Course Code	பாடத் தலைப்பு Subject Title	கற்பித்தல் அளவன் Credit	கற்பித்தல் நேரம் Teaching Hour	மதிப்பெண் Mark			
					அகமதிப்பெண் Internal Mark	புறமதிப்பெண் External Mark		மொத்த மதிப்பெண் Total Mark
						குறைந்த அளவு Minimum	அதிக அளவு Maximum	
பருவம் 1 Semester 1	DPM 3 1 1 1	Core Paper - 1 சுவடியியல் ஓர் அறிமுகம்	5	75	25	34	75	100
	DPM 3 1 1 2	Core Paper - 2 யாப்பியலும் பாட்டியலும்	5	75	25	34	75	100
	DPM 3 1 1 3	Core Paper - 3 தொல்காப்பியம் எழுத்ததிகாரம்	5	75	25	34	75	100
	DPM 7 1 1 1	Elective Paper (Department Subject) 1. சுவடிகளில் எண்ணும் எழுத்தும் 2. சுவடி சேகரிப்பும் பட்டியலிடலும்	4	60	25	27	75	100
	DPM 9 1 1 1	Supportive Paper 1. கணிப்பொறிஅறிவியல் 2. சுற்றுச்சூழல் அறிவியல் 3. நூலக அறிவியல் 4. இந்திய மொழிகள் பயிற்சி 5. சுவடிப் பயிற்சி **பிறதுறை மாணவர்களுக்கானது** (For other dept. students)	3	45	20	27	60	80

பருவம் Semester 2	DPM 3 2 1 1	Core Paper - 4 சுவடிப்பதிப்பு வரலாறு	5	75	25	34	75	100
	DPM 3 2 1 2	Core Paper - 5 சுவடி - களப்பணியும் பாதுகாப்பும்	5	75	25	34	75	100
	DPM 3 2 1 3	Core Paper - 6 தொல்காப்பியம் சொல்லதிகாரம்	5	75	25	34	75	100
	DPM 7 2 1 2	Elective Paper (Department Subject) 1. தமிழக வரலாறும் பண்பாடும் 2. தமிழிலக்கிய வரலாறு	4	60	20	27	60	80
	DPM 8 2 1 1	Supportive Paper (Non-Major) 1. சுவடியியல் **பிறதுறை மாணவர்களுக்கானது** (For other dept. students)	3	45	20	27	60	80
பருவம் 3 Semester 3	DPM 3 3 1 1	Core Paper - 7 வரலாற்று ஆவணங்களும் பல்துறைச் சுவடிகளும்	5	75	25	34	75	100
	DPM 3 3 1 2	Core Paper - 8 மூலபாடத் திறனாய்வு	5	75	25	34	75	100
	DPM 3 3 1 3	Core Paper - 9 தொல்காப்பியம் பொருளதிகாரம்	5	75	25	34	75	100

	DPM 7 3 1 3	Elective Paper (Department Subject) 1. நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் 2. தமிழிலக்கண வரலாறு	4	60	20	27	60	80
	DPM 8 3 1 2	Supportive Paper (Non-Major) 1. சுவடிப்பதிப்பு முறைகள் **பிறதுறை மாணவர்களுக்கானது** (For other dept. students)	3	45	20	27	60	80
பருவம் 4 Semester 4	DPM 3 4 1 1	Core Paper - 10 நூல் பதிப்பாக்கமும் அச்சாக்கமும்	5	75	25	34	75	100
	DPM 3 4 1 2	Core Paper - 11 சுவடி நிறுவனங்கள்	5	75	25	34	75	100
	DPM 3 4 1 3	Core Paper - 12 தமிழ்ச் சுவடிப் பயிற்சி	5	75	25	34	75	100
	DPM 7 4 1 4	Elective Paper (Department Subject) 1. இலக்கியத் திறனாய்வியல் 2. உரையாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும்	4	60	20	27	60	80
	DPM 9 4 1 2	Supportive Paper 1. கணிப்பொறிஅறிவியல் 2. சுற்றுச்சூழல் அறிவியல் 3. நூலக அறிவியல் 4. இந்திய மொழிகள் 5. சுவடிப் பயிற்சி **பிறதுறை மாணவர்களுக்கானது** (For other dept. students)	3	45	20	27	60	80
	DPM 3 4 1	**திட்ட ஆய்வேடு** (Dissertation)	6					200
			94					1960

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 010.
ஓலைச்சுவடித்துறை

சுவடியியல் பட்டயப் படிப்பிற்கான பாடத்திட்டம் (CBSC)

பா.கு. எண்.	பாடத் தலைப்பு	கற்பித்தல் அளவன்	மதிப்பெண்			
			அக மதிப்பெண்	புறமதிப்பெண்		மொத்த மதிப்பெண்
				குறைந்த அளவு	அதிக அளவு	
DPM	சுவடியியல் அறிமுகம் (Introduction of Manuscriptology)	3	25	34	75	100
DPM	சுவடிப் பாதுகாப்பும் பதிப்பு முறைகளும் (Mamuscript Conservation and Methods of Manuscript Edition)	3	25	34	75	100
DPM	தமிழ்ச்சுவடி பயிற்சி - செயல்முறை (Training of Tamail Manuscripts - Practical)	3	25	34	75	100
DPM	ஆய்வேடு (Dissertation)	4	25	34	75	100
		16				400

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 010.

ஓலைச்சுவடித்துறை

ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பிற்கான பாடத்திட்டம்

பா.கு.எண் Course Code	பாடத் தலைப்பு Course Title	கற்பித்தல் அளவன் Credits	மதிப்பெண் Marks			
			அகமதிப்பெண் Internal Mark	புறமதிப்பெண் External Mark		மொத்த மதிப்பெண் Total Marks
				குறைந்த அளவு Minimum	அதிக அளவு Maximum	
DPM 2 1 1 1	Core Paper - 1 Research Methodology	4	25	34	75	100
DPM 2 1 1 2	Core Paper - 2 சுவடியியல்-Manuscriptology	4	25	34	75	100
DPM 2 1 1 3	Core Paper - 3 சுவடிப்பதிப்பும் மாணவர் ஆய்வேடும்	4	25	34	75	100
DPM 2 1 1 4	Core Paper - 4 General Skill	4	25	34	75	100
DPM 2 1 1 5	Dissertation	6			150	150
	Viva-voce	2			50	50
		24				

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 010.
ஓலைச்சுவடித்துறை

முனைவர் பட்டப் படிப்பிற்கான பாடத்திட்டம்

பா.கு.எண் Course Code	பாடத் தலைப்பு Course Title	கற்பித்தல் அளவன் Credits
DPM 1 1 1 1	Core Paper - 1 Research Methodology	
		6
ஆய்வுக் குழுவில் ஆய்வாளர் இதழ்களில் வெளியிடும் கட்டுரைகள், வழங்கும் தன்மை, ஆய்வு முன்னேற்ற அறிக்கை செயல்பாட்டிற்கு		10
		16

விதிமுறைகள்:

1. முதுகலை தமிழ் மற்றும் சுவடியியல்

- பயிற்றுக் காலம் இரண்டாண்டுகள்.
- இளங்கலை தமிழ் மற்றும் இளங்கலை வரலாறு, இளங்கலை நூலக அறிவியல் பட்டம் பெற்றவர்கள் இப்பாடத்தில் சேர்க்கை பெறத் தகுதி உடையவர்கள்.
- முதுகலை தமிழ் மற்றும் சுவடியியல் பாடத்தில் 12 Core papersம் - இவற்றில் ஆய்வேடும் அடங்கும், 4 Supportive Papersம், 4 Elective Papersம் ஆக 20 தாள்கள் எழுத வேண்டும். எழுத்துத்தேர்வு முதன்மைத் தாள் ஒன்றுக்கு 100 மதிப்பெண் வீதம் 11 எழுத்துத்தாளுக்கு 1100 மதிப்பெண்ணும், Core paperஆன ஆய்வேட்டிற்கு 200 மதிப்பெண்ணும், முதல் பருவ Elective paperக்கு 100 மதிப்பெண்ணும், Supportive and Elective மற்றும் முதல் பருவ Elective paper தவிர்த்த ஏனைய Elective paper ஒவ்வொன்றிற்கும் 80 மதிப்பெண் வீதம் 560 ஆக 20 தாளுக்கு 1960 மதிப்பெண்கள்.
- **முதன்மைப் பாடங்கள்** 12**ம்** Elective paper 4**ம் ஓலைச்சுவடித்துறையில் நடத்தப்பெறும்**.
- Supportive Papers **ஓலைச்சுவடித்துறை தவிர்த்த தமிழ்ப் பல்கலைக்கழக ஏனைய துறை** Supportive **பாடங்களாக அமையும்**.
- முதன்மைத் தாள்கள் பன்னிரண்டில் தமிழ்ச் சுவடிப் பயிற்சி தாள் ஒன்று மட்டும் மாணவர்களின் செயல்முறை தாளாக அமையும்.

- ஒரு தாளுக்கு வாரத்திற்கு 5 வகுப்புகள். முதன்மை தாளுக்குக் கற்பித்தல் அளவன் 5ம், Elective பாடத்திற்குக் கற்பித்தல் அளவன் 4ம் Supportive பாடத்திற்குக் கற்பித்தல் அளவன் 3ம் ஆகும். ஒரு கற்பித்தல் அளவனுக்குப் பதினைந்து வகுப்புகள். ஆக ஒவ்வொரு முதன்மை தாளுக்கும் 75 வகுப்புகளும், ஒவ்வொரு Elective பாடங்களுக்கு 60 வகுப்புகளும் Supportive பாடங்களுக்கு 45 வகுப்புகளும் எடுக்க வேண்டும்.
- களப்பணி முதற் பருவத்தில் குறைந்த பட்சம் பத்து நாள்கள் மேற்கொள்ள வேண்டும்.
- தமிழ்ச் சுவடிப் பயிற்சி நான்காம் பருவத்தில் குறைந்தது பத்து ஏடுகள் சுமார் ஐம்பது பாடல்கள் எழுதிப் பாடல் வடிவாக்கிக் காட்ட வேண்டும்.
- தமிழ்ச் சுவடிப் பயிற்சி நான்காம் பருவத் தேர்வில் இருபது பாடல்களைப் பாடல் வடிவாக்கிக் காட்ட வேண்டும். தேர்வின் கால அளவு மூன்று மணி நேரம்.
- சுவடியில் இருந்து ஒரு நூலைப் பதிப்பிற்கு எடுத்துக்கொண்டு பதிப்பிக்க வேண்டும். குறைந்தது 100 பாடல்கள் கொண்டதாக இருக்க வேண்டும். ஆய்வுத் தலைப்பினை மூன்றாம் பருவத்தில் உறுதிப்படுத்திக் கொண்டு நான்காம் பருவத் தேர்வுக்குள் ஆய்வேட்டை அளிக்கவேண்டும்.
- மேலது பட்டியலில் காட்டியபடி தேர்ச்சிக்குப் புறமதிப்பெண்ணும் அகமதிப்பெண்ணும் சேர்த்து 50 எடுக்க வேண்டும்.

2. **சுவடியியல் - பட்டயம்.**
   - பயிற்றுக் காலம் ஓராண்டு.
   - மேனிலை இறுதி வகுப்பு (+2) தேர்ச்சி பெற்றவர்கள் சுவடியியல் பட்டய வகுப்பில் சேர்க்கை பெறத் தகுதி உடையவர்கள்.
   - சுவடியியல் பட்டய வகுப்பில் 2 முதன்மை தாள்களும் 1 செயல்முறை பயிற்சியும் ஒரு ஆய்வேடும் ஆக 4 தாள்கள். தாள் ஒன்றுக்கு 100 மதிப்பெண் வீதம் 4 தாளுக்கு 400 மதிப்பெண்கள்.
   - ஒரு தாளுக்கு வாரத்திற்கு 4 வகுப்புகள். முதன்மை தாளுக்குக் கற்பித்தல் அளவன் 3ம், செயல்முறை பயிற்சிக்கு கற்பித்தல் அளவன் 3ம் ஆய்வேட்டிற்குக் கற்பித்தல் அளவன் 4ம் ஆகும். ஒரு கற்பித்தல் அளவனுக்குப் பதினைந்து வகுப்புகள். ஆக ஒவ்வொரு தாளுக்கும் 45 வகுப்புகள் எடுக்க வேண்டும்.
   - சுவடியில் இருந்து ஒரு நூலைப் பதிப்புக்கு எடுத்துக்கொண்டு பதிப்பிக்க வேண்டும். குறைந்தது 50 பாடல்கள் கொண்டதாக இருக்க வேண்டும்.
   - ஒருவரி விடைகள் பத்துக்குப் பத்து எழுத வேண்டும். ஒரு பக்க வினாக்கள் ஏழுக்கு ஐந்து எழுத வேண்டும். ஒவ்வொரு விடைக்கும் ஐந்து மதிப்பெண்கள். மூன்று பக்க வினாக்கள் ஐந்துக்கு மூன்று எழுத வேண்டும். ஒவ்வொரு விடைக்கும் பத்து மதிப்பெண்கள். ஆகப் புறமதிப்பெண் 75ம், அகமதிப்பெண் 25ஆம் ஆகும். புறமதிப்பெண்ணில் குறைந்தபட்சம் 34 எடுக்க வேண்டும்.

அகமதிப்பெண்ணில் குறைந்தபட்ட மதிப்பெண் இல்லை. தேர்ச்சிக்குப் புறமதிப்பெண்ணும் அகமதிப்பெண்ணும் சேர்த்து 50 எடுக்க வேண்டும்.

3. **ஆய்வியல் நிறைஞர்**

- பயிற்றுக் காலம் ஓராண்டு.
- முதுகலை தமிழ் மற்றும் முதுகலை வரலாறு, முதுகலை நூலக அறிவியல் பட்டம் பெற்றவர்கள் இப்பாடத்தில் சேர்க்கை பெறத் தகுதி உடையவர்கள்.
- ஆய்வியல் நிறைஞர் பாடத்தில் 4 முதன்மை தாள்களும் 1 ஆய்வேடும் ஆக 5 உண்டு. முதன்மைத் தாள் ஒன்றுக்கு 100 மதிப்பெண் வீதம் 4 தாளுக்கு 400 மதிப்பெண்கள். ஆய்வேட்டிற்கு 150 மதிப்பெண்களும், வாய்மொழித் தேர்வுக்கு 50 மதிப்பெண்களும் ஆக மொத்தம் 600 மதிப்பெண்கள்.
- ஒரு தாளுக்கு வாரத்திற்கு 4 வகுப்புகள். முதன்மை தாளுக்குக் கற்பித்தல் அளவன் 4ம், ஆய்வேட்டிற்குக் கற்பித்தல் அளவன் 6ம் வாய்மொழித் தேர்விற்குக் கற்பித்தல் அளவன் 2ம் ஆக கற்பித்தல் அளவன் 24 ஆகும். ஒரு கற்பித்தல் அளவனுக்குப் பதினைந்து வகுப்புகள். ஆக ஒவ்வொரு முதன்மை தாளுக்கும் 60 வகுப்புகள் எடுக்க வேண்டும்.
- ஒரு பக்க வினாக்கள் ஏழுக்கு ஐந்து எழுத வேண்டும். ஒவ்வொரு விடைக்கும் ஐந்து மதிப்பெண்கள். மூன்று பக்க வினாக்கள் எட்டுக்கு ஐந்து எழுத வேண்டும். ஒவ்வொரு விடைக்கும் பத்து மதிப்பெண்கள். ஆகப் புறமதிப்பெண் 75ம், அகமதிப்பெண் 25ஆம் ஆகும். புறமதிப்பெண்ணில் குறைந்தபட்சம் 34 எடுக்க வேண்டும். அகமதிப்பெண்ணில் குறைந்தபட்ச மதிப்பெண் இல்லை. தேர்ச்சிக்குப் புறமதிப்பெண்ணும் அகமதிப்பெண்ணும் சேர்த்து 50 எடுக்க வேண்டும்.
- முதல் தாளுக்கும் நான்காம் தாளுக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைமுறையில் இருக்கும் கலையியல் பிரிவு களுக்கான பாடத்திட்டங்கள் பொருந்தும்.
- இரண்டாம் தாள் சுவடியியல், மூன்றாம் தாள் சுவடிப்பதிப்பும் மாணவர் ஆய்வேடும் ஓலைச்சுவடித்துறைக்கானது.
- ஆய்வேடுகள் தமிழ் மற்றும் வரலாறு தொடர்பான சுவடிப்பதிப்பாகவோ, மூலபாட ஆய்வாகவோ, சுவடியியல் தொடர்பான ஆய்வாகவோ அமைதல் வேண்டும்.

4. **முனைவர் பட்டம்**

- முதுகலை தமிழ் மற்றும் முதுகலை வரலாறு, முதுகலை நூலக அறிவியல் பட்டம் பெற்றவர்கள் இப்பாடத்தில் சேர்க்கை பெறத் தகுதி உடையவர்கள்.

- ஆய்வேடுகள் தமிழ் மற்றும் வரலாறு தொடர்பான சுவடிப் பதிப்பாகவோ, மூலபாட ஆய்வாகவோ, சுவடியியல் தொடர்பான ஆய்வாகவோ அமைதல் வேண்டும்.
- ஆய்வு நெறிமுறைகள் தொடர்பான தேர்வினைச் சேர்க்கை பெறும் துறையிலேயே வைத்து தேர்வுக் குழுவால் மதிப்பீடு செய்ய வேண்டும். இதற்கான மதிப்பெண் கிடையாது. இருப்பினும் கற்பித்தல் அளவன் ஆறு பெறவேண்டும்.
- ஆய்வுக்குழுவில் ஆய்வாளர் இதழ்களில் வெளியிடும் கட்டுரைகள், வழங்கும் தன்மை, ஆய்வு முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றை ஆய்வுக்குழு ஆராய்ந்து கற்பித்தல் அளவன் பத்து பெறவேண்டும்.
- ஆய்வாளர்கள் TNSET, NETஇல் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்களின் முதுகலை மதிப்பெண்ணைக் கணக்கீடு செய்து ஆய்வு நெறிமுறைகளுக்கான கற்பித்தல் அளவன் 6க்கு கணக்கில் கொண்டு தேர்வு செய்யவேண்டும். TNSET, NET இல்லாதவர் களுக்குத் துறை ஆய்வுக்குழுவால் தேர்வு நடத்தி மதிப்பெண் வழங்கி தேர்வு செய்ய வேண்டும்.

முதுகலை தமிழ் மற்றும் சுவடியியல், சுவடியியல் - பட்டயம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், முனைவர் பட்டம் ஆகிய நான்கு பாடங்களை ஓலைச்சுவடித்துறையில் நடத்துவதற்கு ஓலைச்சுவடித்துறையின் பாடத்திட்டக் குழு உறுப்பினர்கள் 16.12.2017அன்று காலை 10.30 மணி முதல் மாலை 4.30மணி வரை தொடர்ந்து விவாதம் செய்து ஒருமனதாக மேற்காணும் பாடத்திட்ட வரைவுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பெற்றன. இவ்வரைவுகளில் ஏதேனும் சிறு மாற்றங்கள் இருப்பின் அவற்றினைச் சரிசெய்வதற்கு பாடத்திட்டக்குழுத் தலைவர் முனைவர் மோ.கோ. கோவைமணி அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கிட இக்குழு பரிந்துரை செய்கிறது.

பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டோர்

தலைவர்

7. முனைவர் மோ.கோ. கோவைமணி
   இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
   ஓலைச்சுவடித்துறை
   தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.

அலுவல்வழி உறுப்பினர்

8. முனைவர் த.கலாஸ்ரீதர்
   உதவிப் பேராசிரியர்
   ஓலைச்சுவடித்துறை
   தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.

நியமன உறுப்பினர்கள்

9. முனைவர் கா. சத்தியபாமா

இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் (ஓய்வு)
தமிழ்த்துறை, சிவகங்கை அரசு மகளிர் கல்லூரி
சிவகங்கை.

10. புலவர் மணி.மாறன்
தமிழ்ப் பண்டிதர்
சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர்-9.

11. முனைவர் கோ. உத்திராடம்
காப்பாட்சியர் (பொ.)
உ.வே.சா. நூலகம்
2, அருண்டேல் கடற்கரை சாலை
பெசண்ட் நகர், சென்னை.

12. முனைவர் அ. சதீஷ்
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, சுவடிப்புலம்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.

முதுகலை தமிழ் மற்றும் சுவடியியல்

Core papers

1. சுவடியியல் ஓர் அறிமுகம்
2. யாப்பியலும் பாட்டியலும்
3. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
4. சுவடிப்பதிப்பு வரலாறு
5. சுவடி - களப்பணியும் பாதுகாப்பும்
6. தொல்காப்பியம் சொல்லதிகாரம்
7. வரலாற்று ஆவணங்களும் பல்துறைச் சுவடிகளும்
8. மூலபாடத் திறனாய்வு
9. தொல்காப்பியம் பொருளதிகாரம்
10. நூல் பதிப்பாக்கமும் அச்சாக்கமும்
11. சுவடி நிறுவனங்கள்
12. தமிழ்ச் சுவடிப் பயிற்சி

Elective Papers (For Dept. students)

முதல் பருவம்

3. சுவடிகளில் எண்ணும் எழுத்தும்
4. சுவடி சேகரிப்பும் பட்டியலிடலும்

இரண்டாம் பருவம்

3. தமிழக வரலாறும் பண்பாடும்
4. தமிழிலக்கிய வரலாறு

மூன்றாம் பருவம்

1. நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்
2. தமிழிலக்கண வரலாறு

நான்காம் பருவம்

1. இலக்கியத் திறனாய்வியல்
2. உரையாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும்

Supportive Papers (For other dept. students)

முதல் பருவம்

1. கணிப்பொறிஅறிவியல்
2. சுற்றுச்சூழல் அறிவியல்
3. நூலக அறிவியல்
4. இந்திய மொழிகள் பயிற்சி
5. சுவடிப் பயிற்சி

இரண்டாம் பருவம்

1. சுவடியியல்

மூன்றாம் பருவம்

2. சுவடிப்பதிப்பு முறைகள்

நான்காம் பருவம்

1. கணிப்பொறிஅறிவியல்
2. சுற்றுச்சூழல் அறிவியல்
3. நூலக அறிவியல்
4. இந்திய மொழிகள்
5. சுவடிப் பயிற்சி

முதுகலை தமிழ் மற்றும் சுவடியியல்
முதல் பருவம்
முதன்மைத் தாள் 1. சுவடியியல் ஓர் அறிமுகம்

நோக்கம் : ஓலைகளில் எழுதப்பெற்ற நிலைகள், எழுதப்படு பொருள்கள் - உரைகள் - பதிப்புகள் - பதிப்பாசிரியர்கள் கற்பித்தல்.

பயன்கள் : சுவடிகளின் பழங்கால நிலைகள், அவை உருவான விதம், இருப்பிட நிலைகள் போன்றவற்றைக் கற்றல்.

அலகு 1. சுவடியியல் : சொற்பொருள் விளக்கம் - நோக்கம் - பயன் தோற்றமும் வளர்ச்சியும்.

அலகு 2. சுவடியியல் கலைச்சொற்கள்.

அலகு 3. சுவடிகளின் காலம் அறியும் முறைகள், காலக்குறிப்புகளால் அறியத்தகும் பழக்கவழக்கங்கள்.

அலகு 4. பழங்கால எழுதுபொருள்கள், ஏடு தயாரிக்கும் முறைகள் - பதப்படுத்தும் முறைகள் - சுவடிகளின் அமைப்புகள் - சுவடிகளின் வகைகள் - எழுத்தாணி வகைகள் - சுவடி எழுதும் முறைகள்.

அலகு 5. சுவடிகளில் எழுத்துக்களும் குறியீடுகளும், சுவடி திரட்டுதல்: நோக்கம் -முறைகள் - பயன்.

நோக்கீட்டு நூல்கள்

1. இந்திய காலக் கணிதம், மோ.கோ. கோவைமணி, பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 1997.
2. ஓலைச்சுவடியியல், முனைவர் மோ.கோ.கோவைமணி, பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 2012.
3. சுவடிப் பதிப்பியல், முனைவர் வே.இரா. மாதவன், பாவை வெளியீட்டகம், தஞ்சாவூர், 2000,
4. சுவடிப் பதிப்பியல் வரலாறு, இரா. இளங்குமரன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2001.
5. சுவடிப்பதிப்பு நெறிமுறைகள், முனைவர் த.கோ. பரமசிவம் (பதிப்.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.
6. சுவடியியல், பூ. சுப்பிரமணியம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991,
7. சுவடியியல், மோ.கோ. கோவைமணி, பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 2006.
8. சுவடியியல் ஆய்வு, தி.மகாலட்சுமி மற்றும் க.ப. வித்யாதரன், ஸ்தபதி பதிப்பகம், சென்னை, 2009.
9. சுவடியியல் கலைச்சொல் விளக்க அகராதி, ம.சா. அறிவுடைநம்பி,கருமணி பதிப்பகம், புதுச்சேரி, 2006.
10. சுவடியியல் வரலாறு, முனைவர் த. கலாஸ்ரீதர், அகரம், தஞ்சாவூர், 2015.

முதுகலை தமிழ் மற்றும் சுவடியியல்
முதல் பருவம்
முதன்மைத் தாள் 2. யாப்பியலும் பாட்டியலும்

நோக்கம் : யாப்பியல் மற்றும் பாட்டியல் தோன்றிய வரலாற்றைக் கற்பித்தல், யாப்பியலக்கண மற்றும் பாட்டியல் இலக்கண அமைப்பு மற்றும் கருத்துக்களைக் கற்பித்தல்.

பயன்கள் : யாப்பியல் மற்றும் பாட்டியல் சிறப்புகளை உணர்தல், யாப்பியல் மற்றும் பாட்டியல் தோன்றிய வரலாற்றைக் கற்றல்.

அலகு 1. தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் - யாப்பின் பழமையும் யாப்பிலக்கணத்தின் புதுமையும் - யாப்பிலக்கண நூல்களும் பாக்களும் - நால்வகைப் பாக்களும் பிறவும்.

அலகு 2. யாப்பின் வகைகள் - பாவும் பாவினங்களும்.

அலகு 3. இலக்கியத்தில் பாக்களின் ஆட்சி - சங்க காலம் முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை - பாட்டியலும் பாவினங்களும் - பாவினங்களின் வளர்ச்சி.

அலகு 4. இலக்கியங்களில் பாவினத்தின் ஆட்சி - சூளாமணி - கம்பராமாயணம் - பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை.

அலகு 5. பாட்டியலும் இலக்கிய வகைகளும்.

நோக்கீட்டு நூல்கள்

1. இலக்கணத்தொகை - யாப்பு - பாட்டியல், ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978.
2. இலக்கண வரலாறு - பாட்டியல் நூல்கள், மருதூர் அரங்கராசன், பாலமுருகன் பதிப்பகம், திருச்சி, 1983.
3. தமிழ் பாவியல், ரா. சீனிவாசன், அணியகம், சென்னை.
4. தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் - இரண்டு தொகுதிகள், சோ.ந. கந்தசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
5. யாப்பதிகாரம், புலவர் குழந்தை, பாரி நிலையம், சென்னை, 1961.
6. யாப்பருங்கலக்காரிகை, கழக வெளியீடு, சென்னை, 1967.
7. யாப்பருங்கலம், கழக வெளியீடு, சென்னை.
8. யாப்பியல், அன்னிதாமசு, அமுத நிலையம், சென்னை, 1998.
9. பாட்டியல் திறனாய்வு, ந.வீ. செயராமன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1977.
10. பாட்டியல்கள் ஓர் அறிமுகம், அரங்க நலங்கிள்ளி, வாணிதாசன் பதிப்பகம், புதுவை, 1986.
11. விருத்தப்பாவியல், தி. வீரபத்திர முதலியார், கழக வெளியீடு, சென்னை, 1984.
12. யாப்பும் பொருளும், பொன். சவுரிராசன் மற்றும் கு. முத்துராசன், தேன் தமிழ்ப் பதிப்பகம், சேலம், 1981.

முதுகலை தமிழ் மற்றும் சுவடியியல்
முதல் பருவம்
முதன்மைத் தாள் 3. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

நோக்கம் : மொழி மற்றும் எழுத்துக்கள் தோன்றிய வரலாற்றைக் கற்பித்தல், தொல்காப்பிய எழுத்ததிகார அமைப்பு மற்றும் கருத்துக்களைக் கற்பித்தல்.

பயன்கள் : தொல்காப்பிய எழுத்ததிகாரச் சிறப்புகளை உணர்தல், மொழி மற்றும் பலவகை எழுத்துக்கள் தோன்றிய வரலாற்றைக் கற்றல்.

அலகு 1. எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் - சித்திர எழுத்துக்கள் - ஒலி எழுத்துக்கள் - ஆப்பு வடிவ எழுத்துக்கள் - எழுத்தும் ஒலியும்.

அலகு 2. எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் - தமிழ் பிராமி - வட்டெழுத்து - கிரந்த எழுத்து - பிறமொழி எழுத்துக்கள்.

அலகு 3. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல்.

அலகு 4. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - புணரியல், தொகைமரபு, உருபியல்.

அலகு 5. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல்.

குறிப்பு: வினாக்கள் நூற்பா, விளக்கம், சான்றுகள் பற்றியனவாக அமைதல் வேண்டும். உரைகள் பற்றியனவாக அமைதல் கூடாது.

நோக்கீட்டு நூல்கள்

1. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை.
2. மொழி வரலாறு, மு. வரதராசனார், கழக வெளியீடு, சென்னை.
3. மொழியின் கதை, மு. வரதராசனார், பாரி நிலையம், சென்னை.
4. எழுத்தின் கதை, மு. வரதராசனார், பாரி நிலையம், சென்னை.
5. சொல்லின் கதை, மு. வரதராசனார், பாரி நிலையம், சென்னை.
6. பண்டைத் தமிழ் எழுத்துக்கள், தி.நா. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.

முதன்மைத் தாள் 4. சுவடிப்பதிப்பு வரலாறு

நோக்கம் : ஓலைச்சுவடிகளில் இருந்து அச்சாக்கம் பெற்ற நூல்களின் பதிப்பு வரலாறுகளையும் அவற்றிற்கான நெறிமுறைகளையும் கற்பித்தல்.

பயன்கள் : ஓலைச்சுவடிகளில் இருந்து கி.பி.1812ஆம் ஆண்டு முதல் அச்சு நூல்கள் வெளிவரத் தொடங்கி இருநூறாண்டுகளுக்கும் மேலாகிறது. இந்நூல்களின் பதிப்பு நிலைகளைக் கற்றல்.

அலகு 1. சுவடிப்பதிப்பு : சொற்பொருள் விளக்கம் - சுவடிப்பதிப்பு வகைகள் - சுவடி நூலகச் சுவடிப் பதிப்புகள், தமிழ்ச் சங்கச் சுவடிப் பதிப்புகள், நிறுவனச் சுவடிப்பதிப்புகள், பல்கலைக்கழகச் சுவடிப் பதிப்புகள், ஆதீனச் சுவடிப்பதிப்புகள்.

அலகு 2. சங்க இலக்கியச் சுவடிப்பதிப்புகள் - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு. இலக்கணப் பதிப்புகள் - தொல்காப்பியம், நன்னூல் மற்றும் பாட்டியல் நூல்கள்.

அலகு3. காப்பியச் சுவடிப்பதிப்புகள் - ஐஞ்சிறு காப்பியம் மற்றும் ஐம்பெருங்காப்பியம், பக்தி இலக்கியச் சுவடிப்பதிப்புகள் - பன்னிரு திருமுறை, நாலாயிர திவ்விய பிரபந்தம்.

அலகு 4. சிற்றிலக்கியச் சுவடிப்பதிப்புகள் - பிள்ளைத்தமிழ், அந்தாதி, கலம்பகம், உலா, குறவஞ்சி.

அலகு 5. மருத்துவச் சுவடிப்பதிப்புகள், சோதிடச் சுவடிப்பதிப்புகள், கலை மற்றும் அறிவியல் நூற் பதிப்புகள், சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்.

நோக்கீட்டு நூல்கள்

1. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1980.
2. உ.வே.சா.வின் சங்க இலக்கியப் பதிப்புகள், டாக்டர் குளோரியா சுந்தரமதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.
3. டாக்டர் உ.வே.சா.வின் பதிப்புப்பணி - ஓர் ஆய்வு, பூ. சொல்விளங்கும் பெருமாள், வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 1981.
4. உ.வே.சா.வின் இலக்கணப் பதிப்புகள், கி. நாச்சிமுத்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,
5. என் சரித்திரம், உ.வே. சாமிநாதையர், உ.வே.சா. நூலகம், சென்னை, 1952.
6. செவ்வியல் தமிழ்ச் சுவடிகள், முனைவர் மோ.கோ. கோவைமணி (பதி.), பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 2014.
7. பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாறு, முனைவர் மோ.கோ. கோவைமணி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2010.

முதன்மைத் தாள் 5. சுவடி - களப்பணியும் பாதுகாப்பும்

நோக்கம் : களப்பணி மூலம் சுவடிகளைக் கண்டறிதல், சுவடிகளைக் காலந்தோறும் பாதுகாக்கும் முறைகள் மற்றும் பாதுகாக்கும் இடங்களைப் பற்றிக் கற்பித்தல்.

பயன்கள் : சுவடிகளைக் கண்டறிதல் மற்றும் அழிந்து வரும் நிலையில் உள்ள ஓலைச்சுவடிகளை மேலும் அழியாமல் பாதுகாக்கும் முறைகளைக் கற்றல்.

அலகு 1. களப்பணி - செய்தி சேகரிக்கும் முறைகள், செய்திப் பதிவுச் சாதனங்கள், தகவல் சேகரிக்கும் முறைகள், களப்பணியில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்.

அலகு 2. ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்கும் முறைகள் - ஓலைச்சுவடிகள் திரட்டும் பல்வேறு நிலைகள் - சுவடிகள் நூலகப் பாதுகாப்பு முறைகள் - மைக்காப்பு - சுவடி கட்டும் முறைகள்..

அலகு 3. சுவடிகளைப் பாதிக்கும் காரணிகள் : உயிரியல் காரணிகள் - சுற்றுப்புறக் காரணிகள் - வேதிமக் காரணிகள் - பயன்படுத்துவோர் - பிற அழிவுகள்.

அலகு 4. சுவடிகள் பாதுகாப்பிற்காகப் பயன்படும் கருவிகள் - சுவடிகள் பாதுகாப்பிற்காகப் பயன்படும் மருந்துப் பொருள்கள்.

அலகு 5. சுவடிகளைச் செப்பனிடும் மரபு வழி முறைகள் மற்றும் நவீன முறைகள். சுவடிகள் நூலகப் பாதுகாப்பு முறைகள் - பழங்காலப் பாதுகாப்பு முறைகள், இக்கால பாதுகாப்பு முறைகள்.

நோக்கீட்டு நூல்கள்

1. ஓலைச்சுவடியியல், முனைவர் மோ.கோ. கோவைமணி, பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 2012.
2. கலைப்படைப்புகளையும் நூலகப் பொருட்களையும் பராமரித்தல், ஓ.பி. அகர்வால், நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி, 1997.
3. கோயில் அரும்பொருள்கள் பாதுகாப்பு, சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர், 1999.
4. சுவடிப்பாதுகாப்பு வரலாறு, ப. பெருமாள், கோவிலூர் மடாலய வெளியீடு, கோவிலூர், காரைக்குடி, 2012.
5. நூல் பயன்பாடும் பாதுகாப்பும், ப. பெருமாள், பாரதி புத்தகாலயம், சென்னை, 2012.
6. சுவடியியல் வரலாறு, த. கலாஸ்ரீதர், அகரம், தஞ்சாவூர், 2015.
7. Care of Archival Materials, V/ Jayaraj, Saraswathy Mahal Library, Thanjavur, 1999.
8. Conservation of Books, Manuscripts and Paper Documents, O.P. Agarwal. INTACH. Lucknow, 1997.

முதன்மைத் தாள் 6. தொல்காப்பியம் சொல்லதிகாரம்

நோக்கம் : தொல்காப்பியச் சொல்லதிகார அமைப்பு மற்றும் சிறப்புக்களைக் கற்பித்தல், தமிழ் மொழியை இலக்கணப் பிழையின்றி எழுதப் பயிற்சி அளித்தல்.

பயன்கள் : தமிழ் இலக்கண அமைப்பைக் கற்றல். மொழியியல் நோக்கில் தமிழ்ச் சொல்லிலக்கணத்தைக் கற்றல். தமிழ் மொழியை இலக்கணப் பிழையின்றி எழுதப் பயிற்சி பெறல்.

அலகு 1. மொழிப் பயிற்சி - எழுத்துப் பிழைகள் மற்றும் தொடர் பிழைகள் நீக்கும் வழிகள் - சில பிழைகளும் திருத்தங்களும்.

அலகு 2. பிறமொழிச் சொற்கள் - வலிமிகா இடங்கள் - வலிமிகு இடங்கள் - எளிய சந்தி விதிகள் - தொடர்களை அமைக்கும் முறைகள் - நிறுத்தக் குறிகளும் பயன்பாடுகள்.

அலகு 3. தொல்காப்பியம் சொல்லதிகாரம் - கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல்.

அலகு 4. தொல்காப்பியம் சொல்லதிகாரம் - விளிமரபு, பெயரியல், வினையியல்.

அலகு 5. தொல்காப்பியம் சொல்லதிகாரம் - இடையியல், உரியியல், எச்சவியல்.

குறிப்பு: வினாக்கள் நூற்பா, விளக்கம், சான்றுகள் பற்றியனவாக அமைதல் வேண்டும். உரைகள் பற்றியனவாக அமைதல் கூடாது.

நோக்கீட்டு நூல்கள்

1. தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம்.
2. தொல்காப்பியம் சொல்லதிகாரம் - தமிழண்ணல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1994.
3. இலக்கண வரலாறு, இரா. இளங்குமரன், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
4. இலக்கணத் தொகை, ச.வே. சுப்பிரமணியன், பாரி நிலையம், சென்னை, 1967.
5. சொல்லிலக்கணக் கோட்பாடு - மூன்று தொகுதிகள், செ.வை. சண்முகம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
6. மொழிநடைக் கையேடு, சொல்நடைக் கையேடு, பா.ரா. சுப்பிரமணியம், மொழி அறக்கட்டளை, சென்னை.

முதன்மைத் தாள் 7. வரலாற்று ஆவணங்களும் பல்துறைச் சுவடிகளும்

நோக்கம் : வரலாற்று ஆவணங்கள் அவை இருக்கும் இடங்கள் மற்றும் அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் பற்றியும் பல்துறைச் சுவடிகள் பற்றியும் கற்பித்தல்.

பயன்கள் : வரலாற்று ஆவணங்கள் பற்றியும் அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் பற்றியும் பல்துறைச் சுவடிகள் பற்றியும் கற்றல்.

அலகு 1. ஆவணம் - பத்திரம், பதிவுகள், படிகள், சாசனம் சொற்பொருள் விளக்கம் - சொல்லாட்சி - பல்வகை ஆவணங்கள் - ஓலை, செப்பேடு, கல்வெட்டுப் பதிவுகள். வரலாற்று ஓலை ஆவணங்கள் - அமைப்பு - பயன் - தனித்தன்மை.

அலகு 2. ஆவணங்களில் மொழியமைப்பு - எழுத்துக்கள் - குறியீடுகள், எழுதும் முறை, பதிவு செய்த நிலைகள். ஆவணங்கள் - அணுகுமுறை, பாதுகாத்தல், படித்தல், படியெடுத்தல், பதிப்பித்தல்.

அலகு 3. வரலாற்று ஆவணங்கள் : தமிழ்ப் பல்கலைக்கழக நூலகச் சுவடிகள் - கீழ்த்திசைச் சுவடி நூலகச் சுவடிகள் - ஆவணக் காப்பகங்கள் - கோயிற் சுவடிகள்.

அலகு 4. பல்துறைச் சுவடிகள் : மருத்துவச் சுவடிகள் - செய்யுள் சுவடிகளின் தனியமைப்பு, உரைநடைக் குறிப்புகள், பட்டறிவுக் குறிப்புகள், பிறமருத்துவக் குறிப்புகள். நாட்டுப்புறப் பாடல்கள் - வழக்குகள், கோயில் ஒழுகுகள், வரலாற்றுக் கதைகள், கதைப்பாடல்கள்.

அலகு 5. பல்துறைச் சுவடிகள் : சோதிடம், ஆரூடச் சுவடிகள், மாந்திரீகச் சுவடிகள், பரிபாஷைச் சுவடிகள், கணிதச் சுவடிகள், தத்துவச் சுவடிகள், பிற சமயச் சுவடிகள்.

நோக்கீட்டு நூல்கள்

1. ஆஸ்தான கோலாஹலம், கா. சத்தியபாமா, சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர், 2004.
2. கணக்கதிகாரம், கா. சத்தியபாமா, சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சை.
3. திருப்போரூர் மற்றும் வடக்குப்பட்டு 18ஆம் நூற்றாண்டு ஆவணங்கள், சென்டர் பார் பாலிஸி ஸ்டடீஸ், சென்னை, 2001.
4. செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள், த. கலாஸ்ரீதர், அகரம், தஞ்சாவூர், 2015.
5. கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள், புலவர் செ. இராசு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.
6. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள், எ. சுப்பராயலு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.
7. சேலம்-நாமக்கல் மாவட்டச் கல்வெட்டுக்கள், அ. கிருட்டினன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2001.
8. தமிழர் அளவைகள், க. பகவதி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
9. தமிழ்ச் சுவடிகளில் எண்கணிதம், பா. கண்ணையன், பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 2008.
10. மனையடி சாஸ்திரம், பூ. சுப்பிரமணியம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,

11. சுவடிப்பதிப்பு நெறிமுறைகள், த.கோ. பரமசிவம் (பதி.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.

முதன்மைத் தாள் 8. மூலபாடத் திறனாய்வு

நோக்கம் : காலந்தோறும் பெருகி வந்த சுவடிகளை ஆராய்ந்து மூல பாடங்களைக் கண்டு பதிப்பிக்கும் முறைகளை விளக்குதல்.

பயன்கள் : சிறந்த மூல பாடங்களைப் பதிப்பிக்கும் முறைகளைக் கற்றல், மூலபாடப் பதிப்புகளை உருவாக்கப் பயிற்சி பெறுதல்.

அலகு 1. மூலபாட விளக்கம் - மூலபாட ஆய்வின் தேவை - மூலபாடத் திறனாய்வு நூல்கள் - மூல பாடத்தை முடிவு செய்தல் - பிரதிகள் இனங்காணல் - அண்மைப் பிரதிகள் - வழிப்பிரதிகள் - ஒற்றைப் பிரதிகள் - அச்சுநூற் பிரதி ஆய்வு.

அலகு 2. பாடவேறுபாடு விளக்கம் - வடிவ வேறுபாடு - பிரதி வேறுபாடு - பாட வேறுபாடு தோன்றக் காரணங்கள்.

அலகு 3. மீட்டுருவாக்கும் செய்யும் முறைகள் - நடையமைப்பு - குடிவழி முறை நிறைகுறைகள் - பயன்கள்.

அலகு 4. உரையாசிரியர்கள் - இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பேராசிரியர், பரிமேலழகர், நச்சினார்க்கினியர்.

அலகு 5. பதிப்பாசிரியர்கள் - ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாதையர், எஸ். வையாபுரிப்பிள்ளை, மு. சண்முகம் பிள்ளை.

நோக்கீட்டு நூல்கள்

1. சுவடியியல், பூ. சுப்பிரமணியம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991.
2. மூலபாட ஆய்வியல், அ. விநாயகமூர்த்தி, பால முருகன் பதிப்பகம், மதுரை, 1978.
3. சுவடிக்கலை, இரா. இளங்குமரன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
4. தமிழ் நூல்களில் பாடவேறுபாடுகள், வே. பழனியப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
5. பிரதிபேத ஆராய்ச்சி, மு. இராமகிருஷ்ணன், நாகர்கோயில்.
6. உரையாசிரியர்கள், மு. வை. அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 2006.
7. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் வாழ்வும் தொண்டும், மு. சண்முகம் பிள்ளை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.
8. பதிப்புலகத் தூண்கள், முனைவர் மோ.கோ. கோவைமணி, பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 2013.
9. சுவடிப் பதிப்பாசிரியர்களின் வரலாறும் பதிப்புப் பணியும் - கட்டுரைத் தொகுப்பு, த. கலாஸ்ரீதர் (பதி.), ஓலைச்சுவடித்துறை, தஞ்சாவூர், 2017.
10. Introduction of Indian Textual Criticism, S.M. Katre, Deccan College, Poona, 1954.
11. Textual and Literary Criticism, Bowers, Fredson, Cambridge University Press, 1966.

முதன்மைத் தாள் 9. தொல்காப்பியம் பொருளதிகாரம்

நோக்கம் : தொல்காப்பியம் பொருளதிகார அமைப்பு முறை, இலக்கியக் கோட்பாடுகளை விளக்குதல் - யாப்பியல் சிந்தனைகளை விளக்குதல்.

பயன்கள் : தொல்காப்பியம் பொருளதிகார இலக்கியக் கோட்பாடுகளை அறிதல், யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி அறிதல்.

அலகு 1. அகத்திணையியல், புறத்திணையியல்
அலகு 2. களவியல், கற்பியல்,
அலகு 3. பொருளியல். மெய்ப்பாட்டியல்
அலகு 4. செய்யுளியல்
அலகு 5. உவமவியல், மரபியல்

குறிப்பு: வினாக்கள் நூற்பா, விளக்கம், சான்றுகள் பற்றியனவாக அமைதல் வேண்டும். உரைகள் பற்றியனவாக அமைதல் கூடாது.

நோக்கீட்டு நூல்கள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை.
2. யாப்பிலக்கணத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - இரண்டு தொகுதிகள், சோ.ந. கந்தசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
3. யாப்பியல், அன்னிதாமசு, அமுத நிலையம், சென்னை, 1998.
4. யாப்பருங்கலக் காரிகை, அமிதசாகரர், கழகம், சென்னை, 1967.
5. யாப்பதிகாரம், புலவர் குழந்தை, பாரி நிலையம், சென்னை, 1961.

முதன்மைத் தாள் 10. நூல் பதிப்பாக்கமும் அச்சாக்கமும்

நோக்கம் : பதிப்பு நெறிகளைக் கற்பித்தல், கையெழுத்துப் படிகளை அச்சாக்கம் செய்யும்பொழுது ஏற்படும் அச்சுப் பிழைகளைக் களைவது பற்றிக் கற்பித்தல், கணினிவழி நூல் உருவாக்குதல்.

பயன்கள் : பதிப்பு நெறிமுறைகளை அறிதல், பதிப்புத்திறன் பெறுதல் - அச்சுப் பிழைகளைத் திருத்தம் செய்வதில் பயிற்சி பெறுதல், கணினி வழி நூல்கள் உருவாக்குதல்.

அலகு 1. பதிப்பு நெறிமுறைகள் - மொழிப் பிழைகளைத் தெரிவு செய்தல் - மொழிநடை - செப்பம் - கருத்துப்பிழை நீக்குதல் - சீராக்குதல் - அட்டவணைகள் - வரைவுகள் சேர்த்தல்.

அலகு 2. அச்சகத் தோற்றம் - அச்சுக்கலை வளர்ச்சி - அச்சக வகைகள், பழைய அச்சகங்களும் புதிய அச்சகங்களும், அச்செழுத்துக்களின் விவரங்கள் - அச்சுக் கோர்த்தல் - அச்சடித்தல்.

அலகு 3. அச்சுப்படி திருத்தம் செய்தல் - திருத்தக் குறியீடுகள், திருத்தும் முறைகள்.

அலகு 4. நூல் உருவாக்கத்தில் கணினியின் பங்கு - கணினி அச்சுக்கோப்பு முறைகள் (Desktop Publishing) - ஒளியச்சுப்பொறி (Laser Printer) - துல்லியப் பிரதிக்கருவி (scanner) - மென்பொருள் - தமிழ் எழுத்துக்கள் - விசைப்பலகை - பயன்பாடுகள்.

அலகு 5. அச்சுத்தொழிலில் அறிவியல் பயன்பாடு - மின்னஞ்சல் (Electronic mail), தொலைநகலி (FAX), ஒளியச்சுத்தட்டுக் காட்சி (Laser Disc vision) - குறுந்தகடு (CD_ROM) - மின் அச்சுக்கோப்பு (Electronic Composing) - சொல் செயலி (Word Processor) - இணையம் (Internet).

நோக்கீட்டு நூல்கள்

1. அச்சுக்கலை, மா.சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1960.
2. புத்தகக்கலை, அ. விநாயகமூர்த்தி, பாலமுருகன், பதிப்பகம், காட்பாடி, 1999.
3. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1980.
4. சுவடியியல், பூ. சுப்பிரமணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991.
5. டெக்ஸ்டாப் பப்ளிஷிங் (DTP), மா. ஆண்டோ பீட்டர், வளர்தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1999.
6. தமிழ்நடைக் கையேடு, சொல்நடைக் கையேடு, பா.ரா. சுப்பிரமணியம், மொழி அறக்கட்டளை, சென்னை.

முதன்மைத் தாள்.11. சுவடி நிறுவனங்கள்

நோக்கம் : காலந்தோறும் சிதறிக் கிடந்த ஓலைச்சுவடிகளைத் தொகுத்து சேகரித்துப் பாதுகாத்து வரும் சுவடி நிறுவனங்கள் பற்றி அறிந்து கொள்ளுதல்.

பயன்கள் : சுவடிகள் பாதுகாத்து வரும் சுவடி நிறுவனங்கள் பற்றியும் அவற்றில் இருக்க்க் கூடிய சுவடிகள் பற்றியும் அறிந்து பயன்கொள்ளல்.

அலகு 1. சுவடி நிறுவனங்கள் : சொற்பொருள் விளக்கம் - தோற்றமும் வளர்ச்சியும் - அவற்றின் வகைகள் - பயன்பாடு.

அலகு 2. அரசு மற்றும் அரசு சார்ந்த சுவடி நிறுவனங்கள் - சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர் - அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகங்கள் (சென்னை, மைசூரி, ஐதராபாத், திருவனந்தபுரம், ஜெய்பூர், பாட்னா, பரோடா) - உ.வே.சாமிநாதையர் நூலகம், சென்னை, ஆசியாடிச் சொஸைட்டி நூலகம், கொல்கத்தா - தேசிக நூலகம், கொல்கத்தா - ராம்பூர் ரஜா நூலகம், உத்திரபிரதேசம்.

அலகு 3. கல்வி நிறுவனச் சுவடி நூலகங்கள் : தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம் - மதுரை காமராசர் பல்கலைக்கழகம் - கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு - தவத்திரு சாந்திலிங்க அடிகளார் கலை மற்றும் தமிழ்க்கல்லூரி, கோவை. மடங்களின் சுவடி நூலகங்கள் : கோவிலூர் மடம் - திருவாவடுதுறை ஆதீனம் - இரமணாஸ்ரமம் - ஆதி பீமாராஜ கோஸ்வாமி மடம், தஞ்சை.

அலகு 4. ஆராய்ச்சி நிறுவனச் சுவடி நூலகங்கள் : அடையாறு நூலகம், சென்னை - சி.பி.ராமசுவாமி அய்யர் பவுண்டேசன், சென்னை, குப்பிசாமி சாஸ்திரி ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - சமஸ்கிருத ஆய்வு அக்கடமி, மேல்கோட்டை - பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம், புதுச்சேரி - ஸ்ரீவெங்கடேஸ்வரா கீழ்த்திசை நிறுவனம், திருப்பதி.

அலகு 5. அயல்நாட்டுச் சுவடி நிறுவனங்கள் : பாரிசு - இலண்டன் - ஸ்காட்லாந்து - கேம்பிரிட்ஜ் - ஆக்ஸ்போர்டு - டென்மார்க் - கிழக்கு ஜெர்மனி - சுவீடன் - சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் உள்ள சுவடி நிறுவனங்கள்.

நோக்கீட்டு நூல்கள்

1. ஓலைச்சுவடியியல், முனைவர் மோ.கோ.கோவைமணி, பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 2013.
2. பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாறு, முனைவர் மோ.கோ. கோவைமணி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2010.
3. சுவடிப்பாதுகாப்பு வரலாறு, ப. பெருமாள், கோவிலூர் மடாலய வெளியீடு, கோவிலூர், காரைக்குடி, 2012.
4. சுவடிச்சுடர், தி. மகாலட்சுமி போன்றோர் (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

முதன்மைத் தாள் 12. தமிழ்ச் சுவடிப் பயிற்சி

நோக்கம் : தமிழ் ஓலைச்சுவடிகளில் உள்ள எழுத்துக்களையும் எண்களையும் அடையாளப்படுத்தி அவற்றைப் படித்துப் படியெடுக்கும் பயிற்சி அளித்தல்.

பயன்கள் : தமிழ் ஓலைச்சுவடிகளைப் படித்துப் படியெடுப்பதால் பல அரிய செய்திகள் தமிழுலகிற்கு வெளிப்படுதல்.

தமிழ் ஓலைச்சுவடிகளில் இருக்கக் கூடிய எழுத்துக்கள் எண்கள் பற்றியும், அவற்றில் எழுதப்பட்டிருக்கக் கூடிய எழுத்து முறைகள் பற்றியும் எளிய முறையில் படிக்கவும் படியெடுக்கவும் உரிய முறையில் பயிற்சி அளித்தல். வாரத்திற்கு ஐந்து வகுப்புகள் வீதம் 75 வகுப்புகளில் பயிற்சி அளிக்க வேண்டும்.

நோக்கீட்டு நூல்கள்

1. சுவடியியல், பூ. சுப்பிரமணியன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991.
2. தமிழ்ச் சுவடிகளில் எண்கணிதம், பா. கண்ணையன், பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 2008.
3. சுவடியியல் பயிற்சி கையேடு, மு.கோ. இராமன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.
4. சுவடியியல் பயிற்சி கையேடு, குடவாயில் பாலசுப்பிரமணியன், சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர்.
5. தமிழ்ச் சுவடிகளில் எண்ணும் எழுத்தும், முனைவர் மோ.கோ. கோவைமணி, பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 2006.
6. எண்ணும் எழுத்தும், மணி.மாறன், சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர், 2012.

விருப்பப் பாடம் 1.1. சுவடிகளில் எண்ணும் எழுத்தும்

நோக்கம் : மொழி மற்றும் எழுத்துக்களும் எண்களும் தோன்றிய வரலாற்றைக் கற்பித்தல். பழங்காலந் தொட்டு எண்ணின் வடிவங்களும் எழுத்தின் வடிவங்களும் நூற்றாண்டு தோறும் வேறுபட்டுக் கொண்டே வருகின்றன. இவற்றைப் பற்றிக் கற்பித்தல்.

பயன்கள் : காலந்தோறும் மாறி வரும் எண்கள் பற்றியும் எழுத்துக்கள் பற்றியும் கற்றல்.

அலகு 1. எண்கள் மற்றும் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் - மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்.

அலகு 2. சித்திர எழுத்துக்கள் - ஒலி எழுத்துக்கள் - ஆய்வு வடிவ எழுத்துக்கள் - எழுத்தும் ஒலியும்.

அலகு 3. தமிழ் எழுத்துக்கள் - ஒலி எழுத்துக்கள் - ஆய்வு வடிவ எழுத்துக்கள் - எழுத்தும் ஒலியும்.

அலகு 4. மொழிப் பயிற்சி - எழுத்துப் பிழைகளை நீக்கும் வழிகள் - பிழைகளும் திருத்தங்களும் - பிறமொழிச் சொற்கள் - வலிமிகா மற்றும் மிகும் இடங்கள், சந்தி விதிகள், தொடர்களை அமைக்கும் முறைகள்.

அலகு 5. சுவடிகளில் எண்களும் எழுத்துக்கள் - அடையாளப் படுத்து முறைகள் - நிறுத்தற் குறிகளும் பயன்பாடுகளும்.

நோக்கீட்டு நூல்கள்

1. பண்டைத் தமிழ் எழுத்துக்கள், தி.நா. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.
2. மொழி வரலாறு, மு. வரதராசனார், கழக வெளியீடு, சென்னை.
3. எழுத்தின் கதை, மு. வரதராசனார், பாரி நிலையம், சென்னை.
4. மொழியின் கதை, மு. வரதராசனார், பாரி நிலையம், சென்னை.
5. சொல்லின் கதை, மு. வரதராசனார், பாரி நிலையம், சென்னை.
6. ஓலைச்சுவடியியல், முனைவர் மோ.கோ. கோவைமணி, பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 2013.
7. தமிழ்ச் சுவடிகளில் எண்ணும் எழுத்தும், முனைவர் மோ.கோ. கோவைமணி, பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 2006.
8. தமிழ்ச் சுவடிகளில் எண்கணிதம், பா. கண்ணையன், பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 2008.
9. தமிழ்ச் சுவடிகளில் எண்ணும் எழுத்தும், முனைவர் மோ.கோ. கோவைமணி, பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், 2006.
12. எண்ணும் எழுத்தும், மணி.மாறன், சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர், 2012.
13. ஆஸ்தான கோலாஹலம், கா. சத்தியபாமா, சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர், 2004.
14. கணக்கதிகாரம், கா. சத்தியபாமா, சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சை.
15. திருப்போரூர் மற்றும் வடக்குப்பட்டு 18ஆம் நூற்றாண்டு ஆவணங்கள், சென்டர் பார் பாலிஸி ஸ்டடீஸ், சென்னை, 2001.
16. செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள், த. கலாஸ்ரீதர், அகரம், தஞ்சாவூர், 2015.

விருப்பப் பாடம் 1.2. சுவடி சேகரிப்பும் பட்டியலிடலும்

நோக்கம் : உலகமெங்கும் இருக்கக் கூடிய சுவடிகளை சேகரிப்பது பற்றியும் அவற்றைப் பட்டியடுதல் பற்றியும் அறிந்து கொள்ளல்.

பயன்கள் : சுவடி சேகரிப்பு பழங்காலந் தொட்டு அண்மைக் காலம் வரை நிகழ்ந்த அனுபவங்களைக் கற்றல் மற்றும் பட்டியலிடும் முறைகளைக் கற்றல்.

அலகு 1. சுவடி சேகரித்தல் - சங்க காலம் - இடைக்காலம் - பிற்காலம் - சேகரிக்கும் முறைகள் மற்றும் பயன்கள்.

அலகு 2. சுவடி சேகரிக்கத் தேவையான உபகரணங்களின் தேவையும் அவற்றின் பயனும் - சுவடி சேகரிக்கும் போது ஏற்படும் சிக்கல் மற்றும் தீர்வுகள்.

அலகு 3. சுவடி சேகரிக்கும் போது களப்பணியாளர் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் - களப்பணியாளரின் தேவைகள் - களப்பணியாளர் பேச்சும் மொழியும் நடவடிக்கையும்.

அலகு 4. சுவடிகளைப் பட்டியலிடல் - நூலகப் பட்டியலிடல் முறைகள் - பழங்காலம் - அவற்றின் பயன்பாடு.

அலகு 5. சுவடிகளைப் பட்டியலிடல் - நூலகப் பட்டியலிடல் முறைகள் - தற்காலம் - அவற்றின் பயன்பாடு.

நோக்கீட்டு நூல்கள்

1. தமிழ்ப் பல்கலைக்கழக சுவடிகள் விளக்க அட்டவணை 1-8 தொகுதிகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2. சரஸ்வதிமகால் நூலகச் சுவடிகள் விளக்க அட்டவணை, 1-30 தொகுதிகள், சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர்.
3. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் அட்டவணை, சென்னை.
4. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகள் விளக்க அட்டவணை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
5. உ.வே.சா. நூலகச் சுவடிகள் விளக்க அட்டவணை, உ.வே.சா. நூலகம், சென்னை.

விருப்பப்பாடம் 2.1. தமிழக வரலாறும் பண்பாடும்

நோக்கம் : தமிழகத்தின் வரலாற்றையும், பண்பாட்டினையும் அறிந்து கொள்ளுதல். பழந்தமிழ் மன்னர்களின் ஆட்சிமுறை, போர்ச்சிறப்பு, கொடைச்சிறப்பு, மக்கள் வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், கலை மேம்பாடு, வாணிபச் சிறப்பினை மாணவர்கட்கு உணர்த்துதல்.

பயன்கள் : தமிழகத்தின் வரலாறு, பண்பாடுகளை உணர்ந்து பண்பாட்டினைக் கட்டிக்காத்தல். பழந்தமிழரின் கல்வி, அகப்புற வாழ்வு, வாழ்வு நெறிகள், ஆட்சியின் மாட்சி, இலக்கியச் சிறப்பு, வாணிகச் சிறப்பினை மாணவர்கள் அறிந்து, சிறந்த குடிமக்களாக வாழ்தல்.

அலகு 1. வரலாற்று விளக்கம் : தொல்பழங்காலம் - வரலாற்றுச் சான்றுகள் - தமிழக மக்களினம் - திராவிடர்களின் தாயகம் - சிந்துவெளி நாகரீகத் தொடர்பு - சங்கங்களின் வரலாற்று உண்மை - சங்க கால இலக்கியம் - சங்க கால புற வாழ்க்கைமுறை.

அலகு 2. பல்லவர்கள் காலம் : தமிழ வரலாற்றில் இருண்ட காலம் - மக்களின் வாழ்வு - இலக்கிய வீழ்ச்சி - பல்லவர் ஆட்சி முறை - பல்லவர் காலத்தில் தமிழக நிலை - அரசியல் சமூகப் பொருளாதார நிலை, கலைத்தொண்டு, சமயம், பக்தி, கல்வி, இலக்கியப் பணிகள்.

அலகு 3. மூவேந்தர் காலம் : பிற்காலச் சோழர்கள் - இந்தியாவிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்ட செல்வாக்கு - சோழச் சாளுக்கிய உறவு - சமூகப் பண்பாட்டு நிலை - பாண்டியர் காலம் - 12ஆம் நூற்றாண்டு தென்னக அரசியல் நிலை - சோழர் பாண்டியர் உறவு - இரண்டாம் பாண்டிய பேரரசு - பொருளாதார நிலை - வெளிநாட்டவர் கண்ட பாண்டியநாடு.

அலகு 4. பண்பாடு - விளக்கம் : நாகரிகம் - பண்பாடு - வேறுபாடு - பழந்தமிழர் நாகரிகமும் பண்பாடும் - குமரிக்குண்ட மக்களின் சமுதாய அமைப்பும் பண்பாடும், பண்டைத் தமிழ் நாகரிகம் - மொழி, உணவு, உடை, உறையுள், சமயம், ஒழுக்கம் , நிலை.

அலகு 5. பண்பாட்டில் ஏற்பட்ட மாறுதல்கள் : சமூக அமைப்பு - தொழில் முறையும் பண்பாடும் - பெண்கள் பண்பாடு - பொருளாதார நிலை - இலக்கியம், கலை வளர்ச்சி (ஓவியம், சிற்பம், கட்டிடம், நாடகம், மருத்துவம், இசை, ஏனைய நுண்கலைகள்) - தொழில் வளர்ச்சி - கல்வியும் பண்பாடும் - ஆட்சிமுறை அறிவியல், இலக்கணம், வானநூல், மொழியுணர்வு நூல் முதலியன - விடுதலைக்கு முன் தமிழக நிலை - விடுதலைக்குப் பின் தமிழகநிலை.

நோக்கீட்டு நூல்கள்

1. தமிழக வரலாறும் பண்பாடும், செல்லம், வே.தி., மணிவாசகர் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு 2000.
2. தமிழர் நாகரிகமும் பண்பாடும், த. தட்சிணாமூர்த்தி, யாழ் வெளியீடு, சென்னை, 1994.
3. தமிழக வரலாறு, சுப்பிரமணியன், என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1979.
4. தமிழகக் கலை வரலாறு, கமலையா. க.சி., மணிபாசகன் பதிப்பகம், சென்னை, 1988.

5. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், கே.கே.பிள்ளை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.

விருப்பப் பாடம் 2.2. இலக்கிய வரலாறு

நோக்கம் : தமிழில் தோன்றிய இலக்கியங்களின் வரலாறுகளை முறைப்படி தெரிவித்தல்.

பயன்கள் : சங்க இலக்கியம் தொடங்கி இக்கால இலக்கியம் வரை தெரிந்து கொண்டு இலக்கியங்களின் நோக்கும் போக்கும் கண்டு பயன் கொள்ளல்.

அலகு 1. தமிழ்மொழி - பழமையும் சிறப்பும் - தமிழினப் பெருமை - தமிழிலக்கிய வடிவங்களும் வகைகளும்.

அலகு 2. தமிழ் இலக்கிய வரலாற்றுக் கல்வி - தொல்காப்பியம் - சங்க காலம் முதலாக, அற இலக்கியங்கள் - பதினெண்கீழ்க்கணக்கு முதலியன.

அலகு 3. தமிழில் காப்பிய இலக்கியங்கள் - சிலம்பு முதலாக, பக்தி இலக்கியங்கள் - பன்னிரு திருமுறைகள், திவ்வியப் பிரபந்தம் - தாயுமானவர் பாடல் - திருவருட்பா வரை.

அலகு 4. தமிழில் சிற்றிலக்கியங்கள் தோற்றமும் வளர்ச்சியும் - பல்வேறு வகைகள், உரையாசிரியர்கள் - இளம்பூரணர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர்.

அலகு 5. பிற்காலப் புலவர்கள் - காளமேகம், குமரகுருபர்ர், சிவப்பிரகாசர். சமயம் வளர்த்த தமிழ் - சமணம், பௌத்தம், சைவம், வைணவம், இசுலாம், கிறித்துவம்.

நோக்கீட்டு நூல்கள்

1. தமிழ் இலக்கிய வரலாறு, முனைவர் ச.வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.
2. தமிழ் இலக்கிய வரலாறு, மு. வரதராசன், சாகித்திய அகாடமி, புதுதில்லி, 1998.
3. தமிழ் இலக்கிய வரலாறு, மு. அருணாசலம்.
4. தமிழ்இலக்கிய வரலாறு, சி.பாலசுப்பிரமணியன், சென்னை, 1969
5. தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் (இரு தொகுதிகள்), மது.ச. விமலானந்தம், 1987.
6. தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ச.வே. சுப்பிரமணியன், சென்னை, 1984.
7. திராவிட மொழி இலக்கியங்கள், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

விருப்பப் பாடம் 3.1. நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்

நோக்கம் : நூலகம் மற்றும் நூலக மேலாண்மை பற்றியும் தகவல் தொழில் நுட்பம் பற்றியும் கற்பித்தல்.

பயன்கள் : பல்வேறு நூலக அமைப்புகள், தகவல்அமைப்பு முறைகள், நூலகப் பொருட்களைப் பாதுகாக்கும் தொழில்நுட்பங்கள் பற்றி அறிதல்.

அலகு 1. நூலக அமைப்பியல் (Library Organization) பொருள் - நூலக வரலாறு மற்றும் வளர்ச்சி - நூலகத்தின் தேவை மற்றும் நோக்கம் - நூலக வகைகள் (கல்வி நூலகம், பொது நூலகம், சுவடி நூலகம்) - நூலக விதிகள்.

அலகு 2. நூலக மேலாண்மை (Library Management) பொதுக்கொள்கை - பணியாளர்கள் - நூலகமும் பயனீட்டாளர்களும் - விதிமுறைகள் - நூல் தேர்வு - நூல் வாங்கும் முறை - நூல் வழங்கும் முறை - இருப்பு சரிபார்ப்பு - புள்ளி விவரம் - நூல்கள் பகுத்தல் மற்றும் பட்டியலிடுதல்.

அலகு 3. நூலகப் பொருட்கள் பாதுகாத்தல் மற்றும் நூல் கட்டுமான முறைகள் (Conservation of Library Materials and Binding) எழுதுபொருள்கள் - ஓலைச்சுவடிகள் - காகிதச் சுவடிகள் - நூல்கள் - நூல்கள் அல்லாத நூலகப் பொருள்கள் - சேமித்தல் - பாதிக்கும் காரணிகள் - பாதுகாப்பு முறைகள் - புனரமைப்பு முறைகள் - நூல்கட்டுமான முறைகள் - வகைகள்.

அலகு 4. தகவல் தொழில்நுட்பம் (Information Technology) நூலக மென்பொருள்கள் - ஆட்டோலிப், சோல்,நிர்மல் மற்றும் பல - கணினி வழி நூல் பட்டியல் - மின் அஞ்சல் - குறுகிய கட்டமைப்பு - விரிந்த கட்டமைப்பு - இணையம் - மின்இதழ்கள் - இணைய நூலகம் - இலக்கு நூலகம் - மின்குறியீடுகள்.

அலகு 5. ஓலைச்சுவடிகள் மின்னணுப்படியாக்கும் முறைகள் - மென்பொருள்கள் மற்றும் வன்பொருள்கள் - மின்னணுப்படிகளைப் பாதுகாக்கும் முறைகள்.

நோக்கீட்டுநூல்கள்

1. வே. தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம்.
2. வே. தில்லைநாயகம், நூலக முன்னோடி
3. பி.எல். முத்தையா, நூலகம் தோன்றிய கதை.
4. வே. தில்லைநாயகம், நாமறிந்த அரங்கநாதன் வாழ்க்கை
5. O.P. Agarwal, Conservation of Manuscripts and Paintings of South East Asia.
6. O.P. Agarwal, Conservation in the tropics.
7. S.R. Ranganathan, Reference Service.
8. S.R. Ranganathan, Library Book Selection.
9. S.R. Ranganathan, Five Laws of Library Science.

விருப்பப் பாடம் 3.2. இலக்கண வரலாறு

நோக்கம் : தமிழில் தோன்றிய இலக்கணங்கள் பற்றியும் அவற்றின் வரலாறு பற்றியும் தெரிவித்தல்.

பயன்கள் : காலந்தோறும் தமிழில் உருவான இலக்கணங்களையும் அவற்றின் அமைப்பு நிலைகளையும் அறிந்து இலக்கியத்தோடு ஒப்பீடு செய்து பயன் கொள்ளல்.

அலகு 1. தொல்காப்பியம் - எழுத்து, சொல், பொருள். ஐந்திலக்கண நூல்கள் - வீரசோழியம், இலக்கண விளக்கம் - சுவாமிநாதம்.

அலகு 2. சொல்லிலக்கண நூல்கள் - நன்னூல், நேமிநாதம். அகப்பொருள் நூல்கள் - இறையனார் அகப்பொருள், நம்பியகப்பொருள், மாறனகப்பொருள்.

அலகு 3. புறப்பொருள் வெண்பாமாலை - பன்னிரு படலம், யாப்பிலக்கண நூல்கள் - யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை - யாப்பதிகாரம்.

அலகு 4. அணி இலக்கண நூல்கள் - தண்டியலங்காரம், மாறனலங்காரம், பாட்டியல் நூல்கள் - வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், பிரபந்த மரபியல் - சிதம்பரப் பாட்டியல்.

அலகு 5. நிகண்டுகள் - திவாகர நிகண்டு - பிங்கல நிகண்டு - சூடாமணி நிகண்டு - நாமதீப நிகண்டு, புதிய இலக்கண நூல்கள் - அறுவகை இலக்கணம், தென்னூல்.

நோக்கீட்டு நூல்கள்

1. இலக்கண வரலாறு, சோம. இளவரசு.
2. இலக்கண வரலாறு, இரா. இளங்குமரன், கழக வெளியீடு, சென்னை.
3. யாப்பிலக்கணத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - இரண்டு தொகுதிகள், சோ. ந. கந்தசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. யாப்பதிகாரம், புலவர் குழந்தை, பாரி நிலையம், சென்னை.

விருப்பப் பாடம் 4.1. இலக்கியத் திறனாய்வியல்

நோக்கம் : இலக்கியக் கல்வியின் தேவை, திறனாய்வின் அணுகுமுறைகள், பயன்கள் பற்றி விளக்குதல்.

